සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

කර්ණාටක සංගීතය I
கர்நாடக சங்கீதம் I
Carnatic Music I

55 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலங்கள்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இராகாங்க இராகம் என்பது
(1) இராக ஆலாபனைக்கு உகந்த இராகம் ஆகும்.
(2) விருத்தம் பாடுவதற்கு உகந்த இராகம் ஆகும்.
(3) ஜன்னிய இராகத்தைக் குறிக்கும்.
(4) ஜனக இராகத்தைக் குறிக்கும்.
(5) வாத்திய இசையில் பிரகாசிக்கும் இராகம் ஆகும்.

**2.** பாடகட்டை வாத்தியம் ஒரு
(1) கான வாத்தியம்
(2) ஸாதக வாத்தியம்
(3) விளம்பர வாத்தியம்
(4) சுருதி வாத்தியம்
(5) ஸுஷிர வாத்தியம்

**3.** "தீம்தனன தில்லில்லானா" எனத் தொடங்கும் பிருந்தாவனி ராகத் தில்லானா ஆரம்பிக்கும் ஸ்வரம்
(1) ஸ்ா (2) ரீ (3) நீ (4) ஸா (5) பா

**4.** தமிழில் பஞ்சதாள சூளாதிகளை இயற்றியவர்
(1) திருப்பதி அன்னமாச்சாரியார்
(2) புரந்தரதாசர்
(3) K. பொன்னையா பிள்ளை
(4) பட்டாபி ராமைய்யர்
(5) T. V. லக்ஷ்மி நரசிம்மன்

**5.** "பொன்னும் மெய்ப்பொருளும்" என்னும் தேவாரம் அமையப்பெற்ற பண்ணிற்கு இணையான இராகம்
(1) மோகனம்
(2) சங்கராபரணம்
(3) சலநாட
(4) ஹரிகாம்போதி
(5) மாயாமாளவகௌளை

**6.** பாடல் அமைந்துள்ள இராகத்தின் பெயரினை சாஹித்தியத்தில் முத்திரையாகக் கொண்டுள்ள உருப்படி
(1) "பாஹிமாம் ஸ்ரீ..."
(2) "கோபிகா மனோகரம்..."
(3) "பார்வதி நாயகனே..."
(4) "ஞானம் அருள்வாய்..."
(5) "உன்னையல்லால்..."

**7.** மொஸாட் அவர்களின் மிகப் பிரபல்யமான 'Marriage Figaro' எழுதப்பட்ட ஆண்டு
(1) 1756 (2) 1764 (3) 1772 (4) 1786 (5) 1788

**8.** பின்வருவனவற்றுள் "ஒரு பொழுதும் இரு சரணம்" எனத் தொடங்கும் திருப்புகழ் அமைந்துள்ள தாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கைகளைக் கொண்ட தாளம்
(1) கண்ட மட்டியம்
(2) கண்ட ஜம்பை
(3) சங்கீர்ண ரூபகம்
(4) சதுஸ்ர திரிபுடை
(5) சங்கீர்ண திரிபுடை

[பக். 2 ஐப் பார்க்க

9. ஆரோகணத்தை சம்பூர்ணமாகவும் அவரோகணத்தில் சுத்தமத்திமம், பிரதிமத்திமம் ஆகிய இரண்டு ஸ்வரங்களையும் கொண்டு வக்ரமாக அமைந்துள்ள இராகம்
(1) ரிதிகௌளை (2) ஸகானா (3) அடானா (4) முகாரி (5) ஸாரங்கா

10. ஸாரங்கி வாத்தியத்தில் காணப்படும் அனுதாபத் தந்திகளின் எண்ணிக்கை
(1) 25 - 30 (2) 30 - 40 (3) 35 - 40 (4) 35 - 45 (5) 35 - 50

11. பின்வருவனவற்றுள் கற்பனாஸ்வரம் பாடுவதற்குப் பொருத்தமான உருப்படி
(1) பதம், கிருதி (2) கீர்த்தனை, தில்லானா
(3) கிருதி, கீர்த்தனை (4) இராகமாலிகை, பதம்
(5) வர்ணம், ஜாவளி

12. ஸ்வாதித்திருநாள் மகாராஜாவின் அரண்மனையினை அணி செய்த ஸாரங்கி வித்வான்களுள் ஒருவர்
(1) தஞ்சாவூர் சிந்தாமணி (2) கன்னையா பாகவதர் (3) பொன்னையா
(4) சிவானந்தம் (5) இறையிம்மன் தம்பி

13. கிளாரினட் ஓர்
(1) ஹிந்துஸ்தானி சங்கீத காற்று வாத்தியம் ஆகும்.
(2) மேலைத்தேய சங்கீத காற்று வாத்தியம் ஆகும்.
(3) கர்நாடக சங்கீத காற்று வாத்தியம் ஆகும்.
(4) மேலைத்தேய சங்கீத தந்தி வாத்தியம் ஆகும்.
(5) ஹிந்துஸ்தானி சங்கீத தந்தி வாத்தியம் ஆகும்.

14. பகுத்துவம் என்பது
(1) ஒரு இராகத்தைப் பாடும்போது இடையிடையே முடியும் ஸ்வரம் ஆகும்.
(2) ஒரு இராகத்தை பல பாகங்களாகப் பிரித்துப் பாடும்போது அடிக்கடி வரும் ஸ்வரம் ஆகும்.
(3) ஒரு இராகத்தைப் பல பாகங்களாகப் பிரித்துப் பாடும்போது முடிக்கப்படும் ஸ்வரம் ஆகும்.
(4) ஒரு இராகத்தில் பலதடவை உச்சரிக்கும் ஸ்வரம் ஆகும்.
(5) இராக ஆலாபனையின்போது உச்ச நிலையில் வரும் ஸ்வரம் ஆகும்.

15. இசைக் கச்சேரிகளில் வாசிக்கப்படும் வளைந்த உலோக வளையத்தைக் கொண்ட துணைத்தாளக் கருவி
(1) கஞ்சிரா (2) கடம்
(3) கோட்டு வாத்தியம் (4) முகர்சிங்
(5) தபேலா

16. கிருதிகளுக்கு மதிப்புக் கொடுப்பதெல்லாம் அவற்றின்
(1) பொருள். (2) மாது. (3) தாது. (4) மொழி. (5) நடை.

17. பாபநாசம்சிவன் அவர்கள் இயற்றிய பதங்களுள் ஒன்று
(1) "இன்னம் என்மனம் அறியாதவர்..." (2) "நீ போய் அழைத்து வாடி..."
(3) "ஸ்வாமி நீ..." (4) "உன்னையல்லால்..."
(5) "தேவி நீயே துணை..."

18. ரிகமபதநி - கமபதநி - மபதநி - பதநி - மபதநி - கமபதநி - ரிகமபதநி
என்னும் ஸ்வரக்கோர்வை அமைந்துள்ள யதி
(1) வேதமத்திமயதி (2) மிருதங்கயதி
(3) ஸ்ரோத்தோவகயதி (4) சமயதி
(5) கோபுச்சயதி

19. மேலைத்தேய சங்கீதத்தில் நடைமுறையில் உள்ள பிரதான தாளகதிகள்
(1) சதுஸ்ர கண்ட கதிகள் (2) திஸ்ர சதுஸ்ர கதிகள்
(3) சதுஸ்ர மிஸ்ர கதிகள் (4) திஸ்ர மிஸ்ர கதிகள்
(5) சதுஸ்ர சங்கீர்ண கதிகள்

20. மேலைத்தேய லிபி முறையில் எழுதும்போது F sharp (F#) என்னும் குறியீடு பயன்படுத்தப்படும் இராகம்
(1) சங்கராபரணம் (2) ஆரபி (3) ஹரிகாம்போஜி
(4) கீரவாணி (5) கல்யாணி

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**21.** 72 மேளகர்த்தா இராகங்களையும் கிரமமாக 12 இசைத்தட்டுக்களில் வாசித்து கர்நாடக இசைக்குப் பெருமை சேர்த்தவர்
(1) எம். எல். வசந்தகுமாரி (2) எம். எஸ். சுப்புலட்சுமி
(3) திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர் (4) வீணை பாலச்சந்தர்
(5) திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை

**22.** பின்வரும் இராகங்களுள் திரிஸ்தாயி தைவதத்தினை எடுத்துக்கொள்ளும் இராகம்
(1) வசந்தா (2) ஸாவேரி (3) கௌளை (4) மலஹரி (5) ஹிந்தோளம்

**23.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
- 'அகில உலக இசைஜோதி' எனும் பட்டத்தைப் பெற்றவர்.
- திருவாங்கூர், மைசூர் ஆகிய சமஸ்தானங்களில் வித்துவானாக இருந்தவர்.
- 1954 ஆம் ஆண்டு ஜனாதிபதி விருது பெற்றவர்.

மேற்கூறப்பட்ட கூற்றுகளுக்குப் பொருத்தமான கலைஞர்
(1) எம்.எஸ். சுப்புலட்சுமி
(2) வீணை பாலசந்தர்
(3) திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை
(4) அமிர்குஸ்ரு
(5) பாலமுரளி கிருஷ்ணா

**24.** "கோபிகா மனோகரம்..." என்னும் மோகனராகக் கீர்த்தனையில் பா ; கரிகா தாபதா ; | ஸ்ா ; ஸ்ாதா | ஸ்ா ; ஸ்ா ; || எனும் தாதுவிற்குப் பொருத்தமான ஸாகித்தியப் பகுதி
(1) தாபத ஹ்ருதய வேஷம் த்ரமேஷம்
(2) கோவர்த்தன கிரிதரம் ஸுரவரம் முரஹரம்
(3) தாபதி ஹரவினுதம் நத சதுரம்
(4) அபராஜித அனந்த வேத கோஷம்
(5) கோபாலம் கௌஸ்துப மணி மோஹம்

**25.** தேசிய கமாஸ் இராகம், கமாஸ் இராகத்தினின்றும் வேறுபடக் காரணமான ஸ்வரம்
(1) நிஷாதம் (2) ரிஷபம் (3) மத்யமம் (4) தைவதம் (5) காந்தாரம்

**26.** கரஹரப்பிரியா இராகத்தின் ஸ்வரஸ்தானங்களை மேலைத்தேய லிபி முறையில் எழுதினால் வருவது
(1) C D Eflat F G A B (2) C D E F G A Bflat
(3) C Dflat E F G Aflat B (4) C D Eflat F G Aflat B
(5) C D Eflat F G A Bflat

**27.** "தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை எழில் பொழில்..." எனத் திருஞானசம்பந்தரால் சிறப்பித்துப் பாடப்பட்ட தலம்
(1) திருக்கோணேஸ்வரம் (2) திருவாவடுதுறை (3) திருத்தருமபுரம்
(4) திருவாலவாய் (5) திருப்பிரமபுரம்

**28.** கர்நாடக சங்கீத குரலிசைக் கச்சேரியொன்றில் பயன்படுத்தக்கூடிய தாளவாத்தியங்கள்
(1) கடம், மிருதங்கம், கஞ்சிரா (2) கடம், தபேலா, மிருதங்கம்
(3) டொல்கி, கடம், கஞ்சிரா (4) தபேலா, கஞ்சிரா, தவில்
(5) உடுக்கு, கடம், மிருதங்கம்

**29.** தன்யாஸி இராகத்தில் ஸகாமபநிஸ் எனும் பிரயோகத்தில் க, நி ஆகியவற்றை அழுத்திப் பாடும்போது ஒலிக்கும் கமகம்
(1) திரிபுச்சம் (2) பிரத்தியாகதம் (3) மூர்ச்சனை (4) கம்பிதம் (5) டாலு

**30.** ஐரோப்பிய சங்கீதத்தில் ஆண்களுக்குரிய நடுத்தரமான குரலின் பெயர்
(1) ஆல்டோ (ALTO)
(2) டெனர் (TENOR)
(3) பரிடோன் (BARITONE)
(4) பாஸ் (BASS)
(5) மெஸோ - ஸொப்ரானோ (MEZZO - SOPRANO)

[பக். 4 ஐப் பார்க்க

**31.** கமக ரீ, ஸாரி நிஸா ரிகம | பத நீ தா | பாம கரிஸ ||
என்னும் ஸ்வரக் கோர்வை அமைந்துள்ள தாளம், நடை என்பவை முறையே
(1) சதுஸ்ர திரிபுடை, கண்ட நடை (2) திஸ்ர திரிபுடை, சதுஸ்ர நடை
(3) திஸ்ர திரிபுடை, மிஸ்ர நடை (4) சதுஸ்ர திரிபுடை, சதுஸ்ர நடை
(5) கண்ட திரிபுடை, திஸ்ர நடை

**32.** யுத்தகளத்தில் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்
(1) தமுக்கு, குழல், சங்கு (2) ரணபேரி, குடமுழா, தோதார்
(3) ரணதுந்துபி, துந்தினா, ரணபேரி (4) ரணபேரி, வீரமுரசு, ரணதுந்துபி
(5) வெற்றிமுரசு, ரணபேரி, ஏக்தார்

**33.** "ஆனை மாமுகனே" என்னும் ஹம்சத்வனி இராக அடதாள வர்ணத்தினை இயற்றியவர்
(1) கூரைநாடு நடேசபிள்ளை (2) சுப்பராம தீட்ஷிதர்
(3) மஹா வைத்யநாதையர் (4) பத்மா வீரராகவன்
(5) திருவரங்கம் ராமநாத பகவதர்

**34.** பின்வரும் அட்டவணையைக் கருதுக.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| DHA<br>தா | DHIN<br>தின் | NA<br>னா | DHA<br>தா | THU<br>து | NA<br>னா |
| X | | | | O | |

மேலே தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஹிந்துஸ்தானி இசைத் தாளம்
(1) திரிதால் (2) ஜப்தால் (3) தாதரா (4) தீப்சந்தி (5) பாஷ்டோ

**35.** பஞ்சபுராணத்தில் நான்காவதாகப் பாடப்படும் இசைப்பாடலைப் பாடியவர்
(1) மாணிக்கவாசகர் (2) சம்பந்தர் (3) சேந்தனார்
(4) சுந்தரர் (5) காரைக்கால் அம்மையார்

**36.** ஹிந்துஸ்தான் காபி இராகத்தில் வரும் அன்னிய ஸ்வரங்கள்
(1) அந்தர காந்தாரம், சுத்த தைவதம், காகலி நிஷாதம்
(2) சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், பிரதிமத்திமம்
(3) அந்தர காந்தாரம், சுத்த மத்திமம், சுத்த தைவதம்
(4) பிரதிமத்திமம், சதுசுருதி தைவதம், காகலி நிஷாதம்
(5) சதுசுருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், கைசிகி நிஷாதம்

**37.** நவராகமாலிகா வர்ணத்தில் முதலாவது சரணஸ்வரம் அமைந்துள்ள இராகம்
(1) பேகட (2) மோஹனம் (3) சங்கராபரணம் (4) கல்யாணி (5) யதுகுலகாம்போஜி

**38.** பல்லவி பாடும் முறையில் 'விச்ராந்தி' என்பது
(1) துவித்தியாங்கத்திற்குப் பின் இடம்பெறும் பகுதி ஆகும்.
(2) பதகர்ப்பத்திற்குப் பின் இடம்பெறும் அட்சரக்கார்வைகள் நிறைந்த பகுதி ஆகும்.
(3) அறுதிக்குப் பின் இடம்பெறும் சாகித்தியப் பகுதி ஆகும்.
(4) பிரதமாங்கத்திற்கு முன் இடம்பெறும் அட்சரக்கார்வைகள் நிறைந்த பகுதி ஆகும்.
(5) துவித்தியாங்கத்திற்குப் பின் இடம்பெறும் அட்சரக்கார்வைகள் நிறைந்த பகுதி ஆகும்.

**39.** பா ;; மாகரி தபமகாரி ஸா ;; ரிநிஸ என்னும் ஸ்வரக் கோர்வையின் மொத்த அட்சர எண்ணிக்கை யாது?
(1) 22 (2) 23 (3) 25 (4) 28 (5) 30

**40.** "நெரநம்மி" என்னும் அடதாள வர்ணத்தை இயற்றியவர்
(1) பட்டணம் சுப்பிரமணிய ஐயர் (2) இராமநாதபுரம் ஸ்ரீநிவாஸ ஐயங்கார்
(3) ஸ்வாதித்திருநாள் மகாராஜா (4) கூரைநாடு நடேசபிள்ளை
(5) நாகர்கோவில் அருணாசல அண்ணாவி

**41.** பின்வருவனவற்றுள் சுத்தாங்கமாகப் பாடப்படுபவை எவை?
(1) இராக ஆலாபனை, சிட்டைஸ்வரம் (2) கற்பனாஸ்வரம், ஸ்வர ஸாகித்தியம்
(3) இராக ஆலாபனை, கற்பனாஸ்வரம் (4) விருத்தம், இராக ஆலாபனை
(5) இராக ஆலாபனை, இராகமாலிகை

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**42.** பாடசாலையில் குழுஇசை நிகழ்ச்சி ஒன்றைத் தயாரிக்கும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய முதல் இரண்டு விடயங்கள்
(1) அணிசேர் வாத்தியங்களைத் தீர்மானித்தல், அழைப்பிதழை வடிவமைத்தல்
(2) மாணவர்களைத் தெரிவுசெய்தல், பயிற்சியளித்தல்
(3) நிகழ்ச்சியில் இடம்பெறவேண்டிய பாடல்களைத் தெரிவுசெய்தல், நிகழ்ச்சிக்கு ஏற்ப மாணவர்களைத் தெரிவுசெய்தல்
(4) மேடை ஒழுங்கு பற்றி உரையாடுதல், மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்
(5) மாணவர்களைத் தெரிவுசெய்தல், மேடையேற்றும் இடம், காலம், நேரம் என்பவை பற்றித் தீர்மானித்தல்

**43.** "ஆரபிமானம்" என்னும் இராகமாலிகையின் விலோம சிட்டைஸ்வரத்தில் வரும் இராகங்களின் ஒழுங்குமுறை
(1) கமலாமனோகரி, பூர்விகல்யாணி, பைரவி, தர்பார்
(2) பூர்விகல்யாணி, பைரவி, கமலாமனோகரி, தர்பார்
(3) கமலாமனோகரி, பைரவி, பூர்விகல்யாணி, தர்பார்
(4) பைரவி, தர்பார், கமலாமனோகரி, பூர்விகல்யாணி
(5) பைரவி, பூர்விகல்யாணி, கமலாமனோகரி, தர்பார்


**44.** 'St Mathew Passion' என்னும் இசை ஆக்கத்தினை இயற்றிய மேலைத்தேய இசை வாக்கேயகாரர்
(1) மொஸாட் (2) பாக்
(3) ஜோகான் கிரிஸ்தோபர் (4) பீத்தோவான்
(5) லியோபோல்ட்

**45.** "வாரண முகனே" என்னும் இலட்சண கீதம் அமைந்துள்ள இராகம்
(1) ஆரபி (2) முகாரி (3) ரேவதி
(4) மலஹரி (5) மாயாமாளவகௌளை

**46.** பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - உபாங்க இராகங்கள்
B - கனபஞ்சக இராகங்கள்
C - சுத்த மத்யம இராகங்கள்
D - ஔடவ இராகங்கள்
E - பாஷாங்க இராகங்கள்

மேற்கூறப்பட்ட விடயங்களில் சுத்தஸாவேரி, ஹிந்தோளம், மத்யமாவதி ஆகிய இராகங்களுக்குப் பொருந்துபவை எவை?
(1) A, B, E (2) A, C, D (3) A, C, E (4) B, D, E (5) C, D, E

**47.** பின்வரும் ஸ்வரஸ்தான அட்டவணையைக் கருதுக.




மேற்குறித்த ஸ்வரஸ்தான அட்டவணை குறிப்பிடும் இராகத்தில் அமையப்பெற்ற கீர்த்தனைகளுள் ஒன்று
(1) "சிவ சிவ சிவயென ராதா..." (2) "ஸரஸ்வதி விதியுவதி..."
(3) "தேவி நீயே துணை..." (4) "பார்வதி நாயகனே..."
(5) "உன்னையல்லால்..."

[பக். 6 ஐப் பார்க்க

**48.** ஒரே தாய் இராகத்தின் ஜன்னியமான இராகங்களாக இருந்தும், பிரத்தியேக கமகத்தினால் வித்தியாசப்படும் இராகங்கள்

(1) மோகனம் - ஹம்சத்வனி
(2) ஆரபி - காம்போதி
(3) பைரவி - மாஞ்சி
(4) ஸாமா - ஹிந்தோளம்
(5) பிலஹரி - ஸாவேரி

**49.** பின்வரும் அட்டவணையைக் கருதுக.

| தாளம் | இலக்கம் | ஜாதி | மொத்த அட்சர காலம் | கதி பேதத்தினால் வரும் எண்ணிக்கையின் மொத்தம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | திஸ்ர கதி | சதுஸ்ர கதி | கண்ட கதி | மிஸ்ர கதி | சங்கீர்ண கதி |
| ஜம்பை | 1. | திஸ்ரம் | 6 | 18 | **A** | 30 | 42 | 54 |
| | 2. | சதுஸ்ரம் | 7 | 21 | 28 | 35 | **B** | 63 |
| | 3. | கண்டம் | 8 | 24 | 32 | 40 | 56 | 72 |
| | 4. | மிஸ்ரம் | 10 | 30 | 40 | 50 | 70 | **C** |
| | 5. | சங்கீர்ணம் | 12 | 36 | 48 | 60 | 84 | 108 |

மேலே தரப்பட்ட அட்டவணையில் **A**, **B**, **C** என்பவை குறிக்கும் எண்ணிக்கைகள் முறையே

(1) 20, 49, 100
(2) 22, 50, 80
(3) 23, 52, 84
(4) 24, 49, 88
(5) 24, 49, 90

**50.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - இந்திய, அராபிய, பாரசீக இசைவகைகளை ஒப்பு நோக்கியவர்.
B - பல துருபத்களை இயற்றியவர்.
C - 300 துருபத்களையும் 150 கயால்களையும் கற்றவர்.
D - 'ரபாப்' வாத்தியத்தை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்.
E - கி.பி. 1588 ஆம் ஆண்டு உயிர் நீத்தவர்.

மேற்கூறிய கூற்றுகளுள் தான்சேன் அவர்களின் வரலாற்றுடன் தொடர்புபட்ட கூற்றுகளைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

(1) A, B, C
(2) A, B, E
(3) B, C, D
(4) B, C, E
(5) B, D, E

* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

කර්ණාටක සංගීතය II
கர்நாடக சங்கீதம் II
Carnatic Music II

55 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலங்கள்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ 'அ' பகுதியில் உள்ள எல்லா வினாக்களுக்கும் 'ஆ' பகுதியில் இருந்து ஒரு வினாவிற்கும் 'இ' பகுதியில் இருந்து **மூன்று** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## 'அ' பகுதி

1. (i) திசி - ஸ்ரீ என்னும் மேள ஸங்கேதத்தினால் குறிக்கப்படும் இராகம் எது?

(ii) 'க்ரகபோத பிரதர்ஷனி' எனும் இசைநூலின் ஆசிரியர் யார்?

(iii) ஸித்தார், தபேலா ஆகிய வாத்தியங்களை உருவாக்கியவர் யார்?

(iv) பண்டைக்காலத்தில் 'ஜல்லரி' என வழங்கப்பட்ட வாத்தியம் எது?

(v) 'Lucio silla' எனும் நாடகத்தை மிலன் நகரில் இயற்றிய மேலைத்தேய வாக்கேயக்காரர் யார்?

(vi) ஸாவேரி இராகத்தின் ஹிந்துஸ்தானிப் பெயர் யாது?

(vii) சோடசாங்கங்களுள் 16 அட்சரகால எண்ணிக்கைகளையுடைய அங்கம் யாது?

(viii) க்ஷேத்ரக்ஞர் முதன் முதலில் இயற்றிய பதத்தின் இராகம் யாது?

(ix) "சேற்றுவயற் காட்டினிலே..." எனும் விவசாயப் பாடலை இயற்றியவர் யார்?

(x) ஜெயதேவரின் அஷ்டபதி போன்று திருவாரூர்ப் பெருமான் மீது அஷ்டபதிகளை இயற்றியவர் யார்?

(xi) நவரோஜ் இராகத்திற்குப் பொருத்தமான பண்கள் **இரண்டினைத்** தருக.

(xii) ஸ்தாயி எல்லையினை அடிப்படையாகக் கொண்ட வாத்தியங்களின் **இரு** பிரிவுகளும் எவை?

(xiii) ஆறாம் திருமுறையில் அடங்கும் பதிகங்களால் அப்பர் பெருமான் பெற்ற சிறப்புப் பெயர்கள் **இரண்டினைத்** தருக.

(xiv) ஸ்வாதித்திருநாள் மகாராஜாவின் முத்திரைகள் **இரண்டு** தருக.

(xv) இசைப்புலவர் என். சண்முகரத்தினம் அவர்கள் இசையாசிரியராகப் பணியாற்றிய பாடசாலைகள் **இரண்டின்** பெயர்களைத் தருக.

(20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## 'ஆ' பகுதி

2. இராகப் பிரிவுகள் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
   (i) திவிதீய கனபஞ்சக இராகங்களைத் தருக.
   (ii) கனபஞ்சக இராகங்களை உதாரணங்களுடன் விளக்குக.
   (iii) சுத்த, சாயாலக, சங்கீரண இராகங்களை உதாரணங்களுடன் விளக்குக.
   (iv) நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்திய இராகப் பிரிவுகளை உதாரணங்களுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

3. பின்வரும் இசை உருப்படிகளுள் **இரண்டினைத்** தெரிவுசெய்து அவற்றினை விளக்குக.
   (i) திருவாசகம்
   (ii) தரு
   (iii) ஜாவளி

(20 புள்ளிகள்)

## 'இ' பகுதி

4. கிருதிகளை அலங்கரிக்கும் அணிகள் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
   (i) தாது சம்பந்தமான அணிகளைக் குறிப்பிடுக.
   (ii) யமகம், மணிப்பிரவாளம் ஆகிய இரு அணிகளையும் உதாரணங்களுடன் விளக்குக.
   (iii) தாதுமாது சம்பந்தமான அணிகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் யாதாயினும் **ஒன்றினை** விளக்குக.

(20 புள்ளிகள்)

5. பின்வரும் இராகங்களில் **இரண்டினைத்** தெரிவுசெய்து அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்)
   (i) ஹிந்தோளம்
   (ii) 21 வது மேளகர்த்தா இராகம்
   (iii) பைரவி
   (iv) ஆபோஹி

(20 புள்ளிகள்)

6. பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
   (i) அவரது குடும்பப் பின்னணியினையும் இளமைக் காலத்தையும் பற்றிக் குறிப்பிடுக.
   (ii) அவர் இயற்றிய உருப்படிகளின் சிறப்புக்கள் பற்றி விரிவாக ஆராய்க.
   (iii) அவர் பெற்றுக்கொண்ட காரணச் சிறப்புப் பெயர்கள் **இரண்டினைத்** தருக.
   (iv) அவரது சீடர்கள் **இருவரது** பெயர்களைக் குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

7. மேலைத்தேய வாத்தியங்கள் பற்றிய பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
   (i) தற்போது வழக்கத்திலுள்ள கிற்றார் வாத்தியத்தின் **மூன்று** வகைகளையும் தருக.
   (ii) கிற்றார் வாத்தியத்தின் அமைப்பினையும் வாசிக்கும் முறையினையும் விளக்குக.
   (iii) பியானோ வாத்தியத்தின் **நான்கு** சிறப்புக்களைத் தருக.
   (iv) இலங்கையில் வழக்கத்திலுள்ள **ஐந்து** வகையான கீபோட் வாத்தியங்களின் பெயர்களைத் தருக.
   (v) பழமை வாய்ந்த பியானோ இசை மேதைகள் **மூவரின்** பெயர்களைத் தருக.

(20 புள்ளிகள்)

8. ஹிந்துஸ்தானி இசைமேதை பாத்கண்டே அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் இசைக்காற்றிய பணிகளையும் ஆராய்க.

**அல்லது**

18 ஆம் 19 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் கர்நாடக இசையின் வளர்ச்சி பற்றி ஆராய்க.

(20 புள்ளிகள்)

* * *


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

LOL Book Store

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

# 25% OFF ALL BOOKS

Including Exercise Books, CR Books, and B5 Books




ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්

**ORDER BOOKS FROM LOL BOOKS STORE**

0372060110 WWW.LOL.LK

071 777 4440 (WhatsApp)

Cash On Delivery Available


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP - 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!